விலை: 50.00
பக்கங்கள் : 12
viber : 076 636 3378

# வலம்புரி

# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 232 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 23 திங்கட்கிழமை (08.08.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.



kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## ரணில் - சீனத் தூதுவர் இரகசிய சந்திப்பு

### அம்பாந்தோட்டை வரும் சீனக் கப்பல் தொடர்பில் ஆராய்வு

(கொழும்பு)

இராஜதந்திர ரீதியில் சீனாவின் ஆய்வுக் கப்பலின் இலங்கை வருகை பாரிய நெருக்கடிகளைத் தோற்றுவித்துள்ள நிலையில் ஜனாபதி ரணில் விக்கிரமசிங்க இலங்கைக் கான சீனத் தூதுவரை சந்தித்துள்ளார்.

சீனத் தூதுவரின் வேண்டுகோளுக்கிணங்க இச்சந்திப்பானது வெளியாட்கள் இல்லாத இரகசியச் சந்திப்பாக இடம்பெற்றுள்ளது.

முன்னதாக சீன ஆய்வுக் கப்பலின் வருகையை தாமதப்படுத்துமாறு இலங்கை அரசு கோரிக்கை விடுத்திருந்தமையை வெளிவிவகார அமைச்சு உறுதிப்படுத்தியிருந்தது.

இவ் சீன ஆய்வுக்கப்பலானது தற்சமயம் அம்பாந்தோட்டை 11

## ஜே.வி.பி - ரணில் நாளை சந்திக்க ஏற்பாடு

### நாட்டின் நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடப்படலாம்

(கொழும்பு)

நாட்டின் நிலைமை தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணி ஜனாதிபதியைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை அதற் 11

## அரசியலமைப்புச் சட்டம் மூலம்

# நாட்டு மக்களுக்கு சரியானதை செய்வேன்



### தேரர்களிடம் ஜனாதிபதி ரணில்

*(கொழும்பு)*

*அரசியலமைப்புச் சட்டத்தின் ஊடாக நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் சரியானதைத் தொடர்ந்தும் செய்வேன் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேரர்களிடம் உறுதியளித்துள்ளார்.*

*(11ஆம் பக்கம் பார்க்க)*

## சகல கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு

### தேர்தல்கள் ஆணைக்குழு அழைப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல கட்சிகளினதும் பிரதிநிதிகளும் இன்றைய தினம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக, தேர்தல் சட்டதிட்ட மறுசீரமைப்பு தொடர்பில் பாராளுமன்ற விசேட தெரிவுக்குழுவினால்முன்வைக் கப்பட்டுள்ள 11

## QR கோட்டா முறை புதுப்பிக்கப்படும்



### எரிசக்தி அமைச்சர் காஞ்சன

(கொழும்பு)

தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் QR முறையுடன் கூடிய தேசிய எரிபொருள் விநியோக அட்டை 11

### நாட்டை மீட்டெடுப்பதற்கு

## ரணிலுக்கு சிறிது காலம் அவகாசம் வழங்க வேண்டும்

### வஜிர அபேவர்தன எம்.பி தெரிவிப்பு



(கொழும்பு)

ஒரு வருடமாக கண்களில் புலப்படாத எரிவாயு, இரண்டு ஆண்டுகளாக காணக் கிடைக்காத இரசாயன பசளை 11

## சர்வதேச நாணய நிதியத்தை கையாள்வது மிகவும் கடினமானது

### அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைவது அவசியம் - ரணில்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தை கையாள்வது மிகவும் கடினமான பணி என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

எனவே பாராளுமன்றத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தருணம் வந்துள்ளதாக அவர் கருத்து தெரிவித்துள்ளார்.

இந்த சர்வகட்சி அரசாங்கத்திற்குள் மக்கள் விடுதலை முன் 11

### எதிர்வரும் 9ஆம் திகதி

## பாரிய மக்கள் போராட்டம் வெடிக்கும்

### பகிரங்கமாக அறைகூவல்

(கொழும்பு)

எதிர்வரும் ஒன்பதாம் திகதி அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள் உட்பட அனைத்து தரப்பினரும் இணைந்து ரணில் ராஜபக்ஷவுக்கு எதிராக மக்கள் கட்டளை 11

## இன்று முதல் ஒரு மணி நேரமே மின் துண்டிப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் இன்று முதல் 10ஆம் திகதி வரை சகல வலயங்களிலும் மாலை 6 மணிக்கும் இரவு 9 மணிக்கும் இடையில் ஒரு மணித்தியாலம் மாத்திரம் மின்சாரம் துண்டிக்கப்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம-7)

## ஜனாதிபதி ரணில் பொய் சொல்கிறார்



### சுமந்திரன் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொய் பேசுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நிலையான அரசு அமைய நிச்சயமாக பாடுபடுவேன்

## பிரதமர் தினேஷ் குணவர்தன



(கொழும்பு)

**நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் நிலையான அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு நிச்சயமாக பாடுபடுவேன் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.**

கொஸ்கம பொரலுகொட ஸ்ரீ வர்தனாராமயே விகாரையின் விகாராதிபதியின் நலன் விசாரிப்பதற்காக பிரதமர் சென்றிருந்தார்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே பிரதமர் இந்த விடயத்தினை குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஆட்சிமுறையை மாற்ற ரணில் தலைமையிலான அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வகட்சி அரசாங்கத்திற்கு அனைவரது பூரண ஒத்துழைப்பு நிச்சயமாக தேவை என்றும் தெரிவித்தார். (ம-7)

# கிளிநொச்சி இ.போ.சவினர் இன்று வேலை நிறுத்த போராட்டம்

(கிளிநொச்சி)

அரச பேருந்து சேவையின் கிளிநொச்சி சாலையினர் இன்று வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர். நேற்றைய தினம் கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் 6 பேர் கொண்ட குழுவினர் மேற்கொண்ட தாக்குதல் சம்பவத்தை கண்டித்தே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

நான்கு வெவ்வேறு சம்பவங்கள் நேற்றுடன் பதிவாகியுள்ளதாகவும் பொலிஸார் தமது பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் பட்சத்திலேயே தமது சேவையை முன்னெடுக்க முடியும் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலகத்தை அண்மித்த பகுதியில் 6 பேர் கொண்ட குழுவினர் பேருந்தினை மறித்து சாரதி மற்றும் நடத்துனரை தாக்கியதால் அவர்கள் காயங்களிற்குள்ளாகியுள்ளனர். சம்பவம் தொடர்பில் தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், காயமடைந்தவர்கள் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளபோதிலும், ஏனைய மூவரையும் கைது செய்து, சட்டத்தின் முன் நிறுத்துவதன் ஊடாகவே தமது பாதுகாப்பு உறுதி செய்யப்படும் எனவும் அதற்காக இன்றைய தினம் கிளிநொச்சி பேருந்து சாலையினால் முன்னெடுக்கப்படும் போக்குவரத்து சேவையை இடைநிறுத்துவதாகவும், 6 பேரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட பின்னர் தமது போராட்டத்தை கைவிடுவதாகவும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

அந்த வகையில் இன்று காலை முதல் குறித்த பகிஸ்கரிப்பில் தாங்கள் ஈடுபடவுள்ளதாகவும், நீதி கிடைக்கவில்லை எனில் ஏனைய பேருந்து சாலையினரும் தமக்கு ஒத்துழைப்பு வழங்க தயாராக உள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர். (ம-7,316)

# சாவகச்சேரியில் விபத்து இளைஞன் உயிரிழப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரியில் கார் மோதியதில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று இரவு 10 மணியளவில் இந்த விபத்துச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

இதில் நுணாவிலைச் சேர்ந்த கந்தையா நிஷாந்தன் (வயது-27) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

சாவகச்சேரியில் இருந்து நுணாவில் நோக்கி இரண்டு இளைஞர்கள் துவிச்சக்கர வண்டியில் சென்றுகொண்டிருந்த போதே இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7)

### ஹட்டனில் சிறுத்தைப் புலியை

# உயிருடன் பிடிப்பதற்கு எடுத்த முயற்சி தோல்வி

(ஹட்டன்)

ஹட்டன், டிக்கோயா - வனராஜா சமர்வில் தோட்டப்பகுதியில் உள்ள மரமொன்றில் ஏறிய சிறுத்தைப் புலியை உயிருடன் பிடிக்க எடுத்த நடவடிக்கை தோல்வியடைந்ததென நல்லதண்ணி வனவிலங்குகள் அலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர்.



இதன்போது சிறுத்தையின் மீதே மரம் விழுந்ததால் சிறுத்தை உயிரிழந்ததாகவும் தெரிவித்த அதிகாரிகள் பிரேத பரிசோதனைக்காக சிறுத்தையை ரந்தெனிகல வனவிலங்குகள் திணைக்களத்துக்கு கொண்டு செல்வதாக தெரிவித்தனர். (ம-7)

# ஓட்டுமடத்தில் வெற்று சிலிண்டர்கள் திருட்டு

## 6 பேர் கைது




(யாழ்ப்பாணம்)

ஓட்டுமடம் பகுதியில் உள்ள லஃவ் எரிவாயு நிறுவனத்தின் களஞ்சிய சாலையை உடைத்து 52 வெற்றுச் சிலிண்டர்களை திருடிய குற்றச்சாட்டில் முதன்மை சந்தேக நபர்கள் உட்பட 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவினரால் இந்தக் கைது நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கடந்த் சில நாட்களுக்கு முன் ஓட்டுமடம் பகுதியில் உள்ள லஃவ் எரிவாயு நிறுவனத்தின் களஞ்சிய சாலையை உடைத்து 7 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் பெறுமதி யான 52 வெற்றுச் சிலிண்டர்கள் திருட்டுப் போயிருந்தன.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் பொம்மைவெளி மற்றும் நாவாந்துறை பிரதேசங்களைச் சேர்ந்த 6 பேர் கைது செய்யப்பட்டனர். சந்தேக நபர்களிடமிருந்து திருடப்பட்ட சிலிண்டர்களும் கைப்பற்றப்பட்டன. (ம-7,33)

### தற்போதைய அரசியல் சூழலை

# தமிழ்த் தலைமைகள் சாதகமாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும்

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வி.கே. ஜெகன்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் ஏற்படவுள்ள சர்வகட்சி அரசாங்கத்தை சரியான முறையில் பயன்படுத்தி தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வைப் பெற்றுக்கொள்வதில் தமிழ் அரசியல் தரப்புக்கள் முனைப்புடன் செயலாற்ற வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கே. வி. குகேந்திரன் (வி.கே. ஜெகன்) தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை மிகவும் காத்திரமானது. முன்னைய ஜனாதிபதிகள் ஆற்றிய உரைகளில் இருந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய உரை வித்தியாசமானது.

அதில் இருக்கக் கூடிய யதார்த்தங்களை சர்வதேச சமூகமும் உன்னிப்பாகக் கவனித்திருக்கும்.

எனவே தற்போது நாட்டில் உருவாகியுள்ள வித்தியாசமான



அரசியல் சூழமைவை தமிழ்த் தரப்புக்கள் தக்கமுறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் எனவும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கே.வி. குகேந்திரன் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜித்- ரணில் கூட்டணி விரைவில் உருவாகும்

## ஐ.ம.ச. பொதுச்செயலாளர்

(கொழும்பு)

**ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியும் மீண்டும் ஒன்றிணைந்து புதிய அரசியல் பயணத்தை ஆரம்பிக்க வேண்டும் என கட்சிக்குள் இருந்து யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்தார்.**

கட்சிக்குள் இது தொடர்பான கலந்துரையாடல்கள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. விரைவில் இது தொடர்பில் சாதகமான தீர்மானம் எடுக்க முடியும் என மத்தும பண்டார நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப் பட்டுள்ள சர்வகட்சி அரசாங்கத்தில் இணைந்து கொள்ள வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளதாக ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்துள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவுடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக, கட்சியிலிருந்து விலகியவர்கள் சஜித் பிரேமதாஸவின் தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தி என்ற கட்சியை ஆரம்பித்து தேர்தலை எதிர் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

எனினும் ஜனாதிபதியுடன் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து சர்வகட்சி அரசாங்கத்திற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ இணக்கம் வெளியிட்டுள்ளார். அமைச்சு பதவிகளை பெற்றுக்கொள்ளாமல் ஆதரவு வழங்குவதாக அவர் தெரித்துள்ளார்.

எனினும் ஐக்கிய மக்கள் சக்தியை சேர்ந்த ஹர்ஷ டீ சில்வா, சர்வகட்சி அரசாங்கத்தில் நிதியமைச்சராக பதவி வகிக்கவுள்ளதாக ஏற்கனவே



தகவல்கள் வெளியாகி இருந்தன.

சில தினங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய சிம்மாசன உரையை முழுமையாக ஏற்றுக்கொள்வதாகவும் பயனுள்ள யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் ஹர்ஷ டீ சில்வா தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(4)

# இலங்கைக்கு வழங்கவிருந்த கடனை நிறுத்திய சீனா

(கொழும்பு)

மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் முதல் கட்டத்தை நிர்மாணிப்பதற்குத் தேவையான 51 மில்லியன் அமெரிக்க டொலர்களை சீனாவின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (எக்ஸிம்) வங்கி இடை நிறுத்தியுள்ளது.

இலங்கை தற்போது எதிர் நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் சீனாவின் எக்ஸிம் வங்கி இந்த பணத்தை விடுவிப்பதை இடை நிறுத்தியுள்ளது.

இதனால், மத்திய அதிவேக நெடுஞ்சாலை சம்பந்தமான திட்டம் தொடர்பில் அரசாங்கம் நெருக்கடிக்கு உள்ளாகி இருப்பதாக கூறப்படுகிறது.

மத்திய அதிவேக நெடுஞ் சாலை நிர்மாணிப்பு பணிகள் கடந்த 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டதுடன் அதனை எதிர் வரும் 2024 ஆம் ஆண்டு நிறைவு செய்வது என திட்டமிடப்பட்டிருந்தது.

இலங்கை அரசின் சுமார் 33 பில்லியன் ரூபா பணத்தில் இந்த அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணிப்பு பணிகளில் 32 வீதமான பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. (4)

# தனியார் மயப்படுத்தப்படவுள்ள 40 அரச நிறுவனங்கள்

(கொழும்பு)

இலங்கையின் சுமார் 40 அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்த வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் நிபந்தனை விதித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் லஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

சர்வகட்சி அரசாங்கம் தொடர்பில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் சந்திப்பை நடத்திய பின்னர் ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "சர்வதேச நாணய நிதியத்துடன் நிதியுதவி குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது.

இதன்போதே சர்வதேச நாணய நிதியம், இலங்கையின் 40 அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்த வேண்டும் என்று கேட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# சேவைநலன் பாராட்டு

திருமதி. **அன்னலட்சுமி வில்வா** (SLTS I)

(BSc,PGDE,M.Sc in Physics Edu)

உப அதிபர், யா/ மகாஜனக் கல்லூரி




**சேவை விபரம்**

| | |
|---|---|
| வ/ கனகராயன்குளம் ம.வி | 10.07.1991– 17.01.1998 |
| யா/ ஸ்கந்தவரோதய கல்லூரி | 18.01.1998– 09.10.2006 |
| ப/பண்டாரவளை தமிழ் மத்திய கல்லூரி | 10.10.2006– 22.06.2011 |
| நீர்/ விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி | 23.06.2011– 01.05.2016 |
| யா/ மகாஜனக் கல்லூரி | 02.05.2016– 06.08.2022 |

2016 இல் எம்மோடு இணைந்து கொண்ட ஆசிரியை திருமதி. அ.வில்வா அவர்கள் ஆரம்பத்தில் பௌதீக பாடத்தினை கற்பித்ததோடு பின்பு தொழில்நுட்பத்துறை மாணவர்களுக்கான பாடங்களை கற்பித்து வந்தார். அத்துடன் தொழில்நுட்பத்துறை பிரிவிற்கான பகுதித் தலைவராகவும் அதன் பின்னர் உப அதிபராகவும் சேவையாற்றி ஓய்வு பெறுகின்றார்.

அவரது சேவைக்காலத்தில் உயர்தர வகுப்பு மாணவர்களின் மிக விருப்பத்திற்குரிய ஆசிரியையாக அவர் இருந்துள்ளார். நிர்வாக விடயங்களில் மிகப் பொறுப்போடு தனது பங்களிப்பை வழங்கி வந்தவர். பாடசாலையில் வருடாந்த பொருட் கணக்கெடுப்பு தொடர்பான விடயங்களுக்கு பொறுப்பாக இருந்து மிகத்திறம்பட அவ்விடயத்தினை கையாண்டார். மேலும் மாணவர்தலைவர்களைத் தெரிவு செய்யும் குழுவிலும் அங்கத்தினராய் இருந்து தன் காத்திரமான பங்களிப்பினை வழங்கியிருந்தார். நிறுவுநர் தின பரிசளிப்புவிழா குழுவிற்கு பொறுப்பாக இருந்து அவ்விழா செம்மையாக நடைபெறுவதற்கு பாடசாலை நேரம் தவிர்ந்த நேரங்களிலும் தனது பங்களிப்பை வழங்கி வந்தார். வருடாந்த மெய்வல்லுநர் போட்டிகளின் போது அது தொடர்பான பதிவுகளைப் பேணுவதற்கும் உதவி வந்துள்ளார்.

நேர்மை, கண்டிப்பு, சக ஆசிரியர்களுடன் இணைந்து பணியாற்றல் போன்ற நல்ல பண்புகளைக் கொண்டுள்ள இவர் எமது ஆசிரியர்கள் எல்லோராலும் மிகவும் மதிக்கப்படுபவர். ஓய்வு பெற்றுச் செல்லும் ஆசிரியை அவரது ஓய்வு காலத்தில் சகல சௌகரியங்களோடும் வாழ வாழ்த்துகின்றோம்.

(அ-4716)

**கல்லூரிச் சமூகம், யா/ மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினா, செந்தூரன் சிறந்த இணைப்பாட்டம் யாழ்.சென்றல் அணி அபார வெற்றி

இலங்கை கிரிக்கெட்டின் நெறிப் படுத்தலில் யாழ். மாவட்ட துடுப்பாட்ட சங்கம் நடத்தும் 50 ஓவர் கொண்ட தொடரின் 23 ஆவது தகுதி காண் போட்டியில் யாழ். சென்றல் அணி இணைப் பாட்ட சாதனையுடன் நியூ ஸ்ரார் அணியை 5 விக்கெட்டு க்களால் வெற்றி பெற் று பிரிவு 'B' யில் 2 ஆம் இடத்தை (RUNNERS) கைப் பற்றியுள்ளது.



நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற நியூஸ்ரார் அணி முதலில் துடுப் பெடுத்தாடிய போது 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 229 ஓட்டங்க ளைப் பெற்றது.

தூயவன்-42, பிரசாத்-16, மோகன் -30, ராசேந் திரம்-22,டன்ஸ்ரன் ஆட் டமிழக்காது 86 ஓட்டங்க ளைப் பெற்றனர். பந்துவீச் சில் யாழ். சென்றல் அணி சார்பாக சலிஸ்ரன் 10 ஓவர்க ளில் 22 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்க ளையும் சுபாதீஸ் 9 ஓவர்க ளில் 43 ஓட்டங் களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்க ளையும் கரி, மதூஸன், செந்தூரன் தலா 1 விக்கெட்டினையும் கைப்பற் றினர்.

230 ஓட்டங்களை வெற்றி இலக் காகக் கொண்டு களமி றங்கிய யாழ்.சென்றல் அணி 36.4 ஓவர்க ளில் 5 விக்கெட்டுக்களையும் 230 ஓட்டங் களையும் பெற்றது.

4 ஆவது இலக்கை இழ க்கும் போது 42 ஓட்டங்கள் 5 ஆவது இலக்கு 226 இல் இழந்துள்ளது.

தினா, செந்தூரனின் 184 ஓட்டங் கள் கொண்ட இணைப்பாட்டமே வெற் றிக்கு வழிவகுத்தது.

தினா 124 ஆட்டமிழக் கவில்லை, செந்தூரன் 56 ஓட்டங்கள் பந்து வீச்சில் நியூஸ்ரார் அணி சார்பாக பிரசாத் 5 ஓவர்களில் 30 ஓட்டங் களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்க ளையும் நிலக்ஸன் 4.5 ஓவர்க ளில் 23 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றி னர்.



இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட் டுக்கழகம் நடத்தும் தரவரி சைப் பட்டியலுக்கு யாழ். சென்றல் அணி 8.60 புள்ளி களையும் நியூஸ்ரார் அணி 2.79 புள்ளிகளையும் பெற்றுக் கொண் டன. (4)

# வீனஸ் பிறீமியர் லீக் உதைபந்தாட்ட தொடர்

VPL எனப்படும் வீனஸ் பிரீமி யர் லீக் உதைபந்தாட்டத் தொடர் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

புத்தூர் மணற்பகுதி வீனஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் நான்கு அணிகள் பங்குபெறும் வீனஸ் பிறீமியர் லீக் ஆனது நான்கு அணி உரிமையாளர் களால் அணிவீரர்கள் ஏலத்தில் எடுக்கப்பட்டு தெரிவுசெய்யப்பட்ட வீரர்களைக் கொண்டு உருவாக் கப்பட்ட அணிகளாகும்.

புத்தூர் வீனஸ் விளையாட்டு க்கழக மைதானத்தில் நேற்று முன்தினம் மாலை ஆரம்பமான போட்டியில் பங்குபற்றிய அணி களின் விவரங்கள்

A-வீனஸ் வோரியர்ஸ்
B- வீனஸ் சிறுத்தைகள்
C-வீனஸ் வின்னர்ஸ்
D-வீனஸ் றோயல்ஸ் என் பனவாகும்.

முதல்நாள் போட்டியின் முதல் ஆட்டத்தில் வீனஸ் வோரியர்ஸ் அணியும் வீனஸ் சிறுத்தைகள் அணியும் மோதிக் கொண்டன.

இதில் வோரியன்ஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இதில் வோரி யனஸ் அணியை சேர்ந்த முன் கள வீரர் கபில்ராஜ் சிறந்த வீரராக தெரிவுசெய்யப்பட்டார்.

இரண்டாவது போட்டியில் வீனஸ் வின்னர்ஸ் அணியும் வீனஸ் றோயல்ஸ் அணியும் மோதிக்கொண்டன. இதில் வீனஸ் வின்னர்ஸ் 4:1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. வீனஸ் வின்னர்ஸ் அணியை சேர்ந்த முன்கள வீரர் வினோ யன் ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

தொடர்ந்து போட்டிகள் இடம் பெறவுள்ளது. எதிர்வரும் 21 ஆம் திகதி இறுதிப் போட்டிகள் இடம்பெறும். (4-104)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2680

### யஸ்வின்




### தாரணி




### பிரணித்தா




### பிரணவன்




### கம்சா




### லோஜினி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குரங்கு அம்மை தொற்றாளர்களை இனங்காண்பதற்கான பரிசோதனை

### இன்று முதல் ஆரம்பம்

(கொழும்பு)

குரங்கு அம்மை தொற்றாளர்கள் நாட்டில் காணப்படுகின்றார்களா என்பது தொடர்பில் இன்று முதல் பரிசோதிக்கப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மருத்துவ தொழில் நுட்ப சேவை பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் அன்வர் ஹம்தானி ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் இதனை குறிப்பிட்டுள்ளார்.

பொரளை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் கண்டி தேசிய மருத்துவமனை ஆகிய பகுதிகளில் மருத்துவ ஆராய்ச்சி மையங்கள் அமைத்து பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

## அவசரகால சட்டத்தின் பல சரத்துக்களில் திருத்தம்

(கொழும்பு)

ஜூலை 18 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வெளியிடப்பட்ட அவசர கால சட்டத்தின் பல சரத்துக்கள் பொது பாதுகாப்பு சட்டத்தின் கீழ் திருத்தப்பட்டுள்ளன. அதன்படி, தேடுதல் மற்றும் கைது தொடர்பான குற்றவியல் சட்டத்தின் பிரிவுகள் 365 (a) மற்றும் 365 (b) நீக்கப்பட்டு, பிரிவுகள் 408 மற்றும் 410 முதல் 420 வரையான பிரிவுகள் சேர்க்கப்பட்டுள்ளன.

மேலும், உயர் நீதிமன்றத்தில் குற்றம் நிரூபிக்கப்பட்டால் விதிக்கப்படும் தண்டனை தொடர்பான பிரிவின் கீழ் உள்ள, குற்றவியல் சட்டத்தின் 365, 365 (ஏ) மற்றும் 365 (பி) ஆகியன நீக்கப்பட்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக இந்த திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (4)

## மணிக்கு 32 பேர் நாட்டை விட்டு வெளியேற்றம்

(கொழும்பு)

நாடு எதிர்கொள்ளும் கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக ஒவ்வொரு மணித்தியாலத்திலும் 32 இலங்கையர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதாக தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் வெளிவிவகார பிரிவின் தரவுகளுக்கமைய இந்த தகவல் தெரியவந்துள்ளது.

இது கடல் வழியாக சட்ட விரோதமாக தென்னிந்தியா அல்லது அவுஸ்திரேலியாவிற்கு தப்பிச் செல்லும் எண்ணிக்கையை விட அதிகமாகும்.

உடல் ரீதியான துஷ்பிரயோகம், கொள்ளை, நீண்ட வேலை நேரம், மனித உரிமை மீறல்கள், ஊதியம் இல்லாமை அல்லது குறைவான ஊதியம், இறப்பு மற்றும் ஊனம் போன்ற ஆபத்துகள் இருந்தபோதிலும், வெளிநாடுகளுக்கு வேலைக்குச் செல்லும் பெண்கள் மற்றும் ஆண்களின் எண்ணிக்கை இந்த ஆண்டு நான்கு மடங்காக அதிகரித்துள்ளது. (4)

## மரக்கறிகளின் விலைகள் உயரும்

(கொழும்பு)

எதிர்வரும் வாரங்களில் நாட்டில் மரக்கறிகளின் விலைகள் பாரிய அளவில் அதிகரிக்க கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது. 40 தொடக்கம் 50 சதவீதத்தால் இவ்வாறு மரக்கறிகளின் விலைகள் அதிகரிக்க கூடும் என அகில இலங்கை பொருளாதார மத்திய நிலையங்களின் குழு தெரிவித்துள்ளது.

நிலவும் மழையுடனான வானிலை காரணமாக விளைச்சல்கள் சேதமடைந்துள்ளமையினால் மரக்கறிகளின் விலைகள் அதிகரிக்கக்கூடும் என குறிப்பிடப்படுகின்றது. (4)

### 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர். திரு.

**மாணிக்கம் சண்முகராஜா**

(வில்லுத்தடி இராஜன், இராஜன் மினிபஸ் உரிமையாளர்)

தோற்றம் 24.05.1955

மறைவு 08.08.2015

திதி:- 08.08.2020

உலக வாழ்வு நிலையில்லாதது என்பதை யாமறிவோம்

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

(12367)

82/17, 3 ஆம் ஒழுங்கை பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

### யா/வேலாயுதம் மகா வித்தியாலயம் பருத்தித்துறை

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

திருமதி.

**சுபாசினி விஜயேந்திரன்**

(BA( HONS), PGDE)




எமது பாடசாலையில் புவியியல் பாட ஆசிரியராக அளப்பரிய சேவையாற்றிய திருமதி. சுபாசினி விஜயேந்திரன் அவர்கள் 01.08.2022 அன்று அதிபர் சேவை தரம் 3 நியமனம் பெற்று யா/நெல்லியடி மத்திய கல்லூரியில் பிரதி அதிபராகக் கடமையேற்றமையை மனமகிழ்ந்து பாராட்டுவதோடு அவரின் சேவை ஓங்கிப் பெருமை பெற வாழ்த்துகின்றோம்.

(சி-478)

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்.**

## இராசிபலன்

08.08.2022
ஆடி 23, திங்கட்கிழமை
ஏகாதசி பிற்பகல் 5.35 மணிவரை

கேட்டை முற்பகல் 11.57 மணிவரை
சுபநேரம் 12.04-1.34 மணிவரை
இராகுகாலம் 7.34- 9.04 மணிவரை

ஏகாதசி விரதம்
சந்திராஷ்டமம் - கார்த்திகை.

**வளவன்**

**மேஷம்** வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள்.

**ரிஷபம்** குடும்பத்தில் சிறுசிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், உடல்நலன் பற்றிய கவலைகள் தோன்றும், எடுத்த காரியங்களில் சில தாமதங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்** நண்பர்கள் நம்பிக்கைக்கு உரியவர்களாக நடந்து கொள்வர், ஆசைப்பட்ட பொருள் ஒன்றை வாங்கி மகிழ்வீர்கள். காரிய அனுகூலமுண்டு, கௌரவமான நாள்.

**கடகம்** பொதுநல ஈடுபாட்டில் ஆர்வம் கூடும், பகையொன்று நட்பாகலாம், பல நாட்களாக செய்ய நினைத்த வேலையொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், போசன சுகமுண்டு.

**சிம்மம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பிள்ளைகள் வழியில் பெருமைகள் ஏற்படலாம்.

**கன்னி** இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், பயணங்கள் கைகூடும்.

**துலாம்** நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, சகோதர வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி கூடும் நாள், நண்பர்களின் ஒத்துழைப்பால் நலம் காண்பீர்கள், அனைத்திலும் வெற்றி பெற கணபதியை வழிபட வேண்டிய நாள்.

**தனுசு** சிக்கனத்தை கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம், சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள்.

**மகரம்** குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, செய்தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும் நாள்.

**கும்பம்** எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள், எதிர்பார்த்த தனவரவுகள் வந்து சேரலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**மீனம்** மற்றவர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், செய்தொழிலில் முன்னேற்றம் காணும் நாள், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

முடிவு என்னும் விதை முளைக்க உழைப்பு என்னும் மண் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

அம்புலிமாமா

## மனம் மாறியது

(நேற்றைய தொடர்ச்சி)

மாதவனும் மகிழ்ச்சியா? அது இனி என் வாழ்வில் இல்லை அதனால் அப்படிப்பட்ட பாட்டு பாட முடியாது என்றான்.

அதுகேட்டு அப்பிசாசுகள் இந்த இளம் வயதிலேயே உனக்கு வாழ்க்கை மீது வெறுப்பு ஏற்பட்டு விட்டதா? அது ஏன்? என்று கேட்டன. மாதவனும் தான் அபர்ணாவிடம் பட்ட அவமானத்தைக் கூறினான்.

அப்போது பிசாசுகள் தமக்குள் ஏதோ பேசிக் கொண்டன. பிறகு அவை அந்த அபர்ணா மகா கர்வம் பிடித்தவள் போல் தெரிகிறது. கவலைப்படாதே. அவளை உனக்குக் கல்யாணம் செய்து வைப்பது எங்கள் பொறுப்பு. இப்போது நீ போய் விட்டு அடுத்த பௌர்ணமியன்று வந்து எங்களை பார் என்றன. மாதவனுக்கு அவற்றின் வார்த்தைகளின் மீது நம்பிக்கை ஏற்படாது போனாலும் அவன் அங்கிருந்து சென்றான்.

மறுநாள் மாலை அபர்ணா நந்தவனத்திற்கு மலர் பறித்துக் கொண்டு கோவிலுக்குப் போனாள். அங்கிருந்து அவள் திரும்புகையில் ஒரு முயலை ஒரு சிறுத்தைப் புலி துரத்திக் கொண்டு வருவதைக் கண்டாள். முயல் வேகமாக ஓடி எங்கோ பதுங்கி விட்டது. அப்போது சிறுத்தைப் புலிக்கு அபர்ணா தென்படவே அவள் மீது பாய்ந்தது. ஆனால் அப் போது திடீரென மாதவன் ஓடி வந்து அந்தப் புலியைக் கத்தியால் தாக்கிக் குத்திக் கொன்றான். அபர்ணா அப்போது மனதில் ஆகா! மாத வன் இவ்வளவு அசகாய சூரனா? என நினைத்து ஆச்சரியப்பட்டாள். அவள் அவனுக்கு நன்றி சொல்வதற்குள் அவன் அங்கிருந்து போயே விட்டான். அவள் ஆபத்தில் உதவியவருக்கு நன்றி கூடச் செலுத்த முடியவில்லையே என்று எண்ணியவாறே வீட்டை அடைந்தாள்.



அவள் போனதும் முயலும், சிறுத்தைப் புலியும் மாதவனும் பிசாசுகளாகி பேஷ் நம் திட்டம் நன்கு செயற்படுகிறது. என்று கூறி மகிழ்ந்தன. மறுநாள் அபர்ணா கோவிலுக்குப் போய் விட்டு வந்த போது முன் தினம் காலியாக இருந்த இடத்தில் அப்போது ஒரு அழகிய மாளிகை இருப்பதைக் கண்டாள். அவள் அது எப்போது கட்டப்பட்டது என்று திகைத்து நிற்கையில் அம் மாளிகையிலிருந்து மாதவன் வாசலுக்கு வந்து அங்கே இருந்த வேலைக்காரனிடம் ஏதோ சொல்லிவிட்டுச் சென்றான். அதைக் கண்ட அபர்ணா அந்த வேலைக்காரனருகே போய் இந்த மாளிகை யாருடையது? என்று கேட்டாள். (தொடரும்)

# சிலப்பதிகாரம்

## கானல் வரிகள்

அப்போது கோவலன் மனத்திலிருந்த உஷ்ணம் இசை வடிவில் இனிமையாக்கப்பட்டு வெளிவந்தது. என்றே சொல்ல வேண்டும். அதுதான், கானல் வரிகள்.




கோவலன் அப்போதிருந்த மனநிலையில் குற்ற உணர்வு மேலோங்கி இருந்தது. கண்ணகியைத் தனியாகத் தவிக்கவிட்டு வந்ததும் அதற்காகக் கோவலனை அவள் வெறுக்காததும் அவனைப் பாடாகப் படுத்த ஆரம்பித்திருந்தன. அவன் மனம் முழுக்கக் கண்ணகியே இருந்தாள்.

இதனால் அன்றைக்கு அவன் பாடிய பாடல்களின் வரிகளை இந்த உணர்வு ஆக்கிரமித்தது. காவிரியைப் பெண்ணாகவும், சோழ மன்னனை அவள் கணவனாகவும் உருவகப்படுத்திக் கோவலன் பாடினான்.

உண்மையில் அவன் மனத்துக்குள் காவிரிக் [illegible] [illegible] மாதவிக்குப் புரிந்திருக்க நியாயமில்லை.

காவிரிப் பெண்ணே உன் கணவன் கங்கையைக் கூடினாலும் கூட அவனை நீ வெறுக்காமல் இருப்பதற்குக் காரணம் மாசு இல்லாத உன் கற்புதான் என்கிற பொருளில் முதல் பாடலைப் பாடி முடித்தான் கோவலன். அடுத்து அவன் புகார் நகரை முன்னிலைப்படுத்திப் பாடினான். அதிலும் ஓர் உள் அர்த்தம் ஒளிந்திருந்தது.

ஆம்பல் மலர், இரவு என்று நினைத்து மயங்கி, பகலில் பூத்தது போல, உன்னுடைய பொய்யான உறுதி மொழிகளை உண்மை என்று நினைத்து ஏமாந்தாள் ஒரு பேதைப் பெண்.

இந்தப் பாடலின் அர்த்தம், திருமணத்தின்போது அக்கினியை வலம் வந்து கொடுத்த உறுதி மொழிகளை மீறித் தான் கண்ணகியைக் கைவிட்டு வேறொரு பெண்ணுடன் இருப்பதைக் குறிப்பதுதான் அதும் மாதவிக்குப் புரியவில்லை.

இன்னொரு பாட்டில் கடலில் வாழும் மீன்களைக் காக்கும் வேதனையை விட்டு மீன் வற்றலைக் காவல் காத்துக்கொண்டும் பார்க்கிறவர் மனத்தில் காமத்தைத் தூண்டுகிறவளாகவும் இருக்கும் ஒரு பெண்ணிடம் விழுந்தேனே என்று பாடினான் கோவலன்.

இதைக் கேட்டபிறகும், மாதவிக்குக் கோவலனின் குற்ற உணர்வும், கண்ணகி மீது இருந்த உயர்ந்த எண்ணமும் புரியவில்லை. மாறாக அவன் மனத்தில் வேறொரு பெண் இருப்பதைக் குறிப்பால் உணர்த்துகிறான் என்கிற அளவில் அரைகுறையாக அதைப் புரிந்து கொண்டாள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 45

ரஷ்யாவின் கருங்கடல் கடற்படை (Black Sea Fleet) மற்றும் செவஸ்டோபோல் துறைமுகம் ஆகியவற்றின் கட்டுப்பாடு சம்பந்தமாக ரஷ்யாவிற்கும் உக்ரைனுக்கும் இடையே 1992 இல் தகராறு ஏற்பட்டது.

1994 இல் பிராந்தியத்தில் பதட்டங்கள் அதிகரித்தன: பிரிவினைவாதத் தலைவர் யூரி மெஷ்கோவ் ஜனவரி மாதம் கிரிமியாவின் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். மேலும் இரண்டு மாதங்களுக்குப் பிறகு இறையாண்மைக்கான வாக்கெடுப்பு நிறைவேற்றப்பட்டது.

### 1994 கிரிமியா ஜனாதிபதி தேர்தல்

கிரிமியாவின் ஜனாதிபதி பதவிக்கு கிரிமியாவின் தன்னாட்சி குடியரசில் ஒரே ஒரு ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. கிரிமியா அந்த நேரத்தில் உக்ரைனுக்குள் ஒரு தன்னாட்சிக் குடியரசாக இருந்தது. ஒக்டோபர் 13, 1993 இல் கிரிமியாவின் பாராளுமன்றத்தால் இந்த அலுவலகம் உருவாக்கப்பட்டது. குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்க இரண்டு சுற்று முறை பயன்படுத்தப்பட்டதால், ஜனவரி 16, 1994 அன்று இரண்டாவது சுற்று ஜனவரி 30 அன்று தேர்தல்கள் நடத்தப்பட்டன.

ரஷ்ய சார்பு யூரி மெஷ்கோவ் இரண்டாவது சுற்று வாக்கெடுப்பில் 72.9 சதவீத வாக்குகளுடன் வெற்றி பெற்றார். வேறு சில வேட்பாளர்களும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டனர்.



கிரிமியா குடியரசின் தலைவர் யூரி மெஷ்கோவ் 1994-1995

உக்ரைனின் மத்திய தேர்தல் ஆணையம் மற்றும் உக்ரைன் ஜனாதிபதி லியோனிட் க்ராவ்சுக் இதை சட்டவிரோ தமாக அறிவித்தாலும், அந்த யோசனை இன்னும் முன்னேறியது.

### 1994 கிரிமியன் வாக்கெடுப்பு (1994 Crimean referendum)

கிரிமியாவில் 27 மார்ச் 1994 அன்று பிராந்திய மற்றும் தேசிய தேர்தல்களுடன் மூன்று பகுதி வாக் கெடுப்பு நடத்தப்பட்டது. வாக்காளர்கள் உக்ரைனுக்குள் அதிக சுயாட்சிக்கு ஆதரவாக இருக்கிறார்களா, குடியிருப் பாளர்கள் இரட்டை ரஷ்ய மற்றும் உக்ரைனிய குடியுரிமையைப் பெற வேண்டுமா, ஜனாதிபதி ஆணைகள் சட்டங் களின் அந்தஸ்தைப் பெற வேண்டுமா என்று கேட்கப்பட்டது. மூன்று திட்ட ங்களும் கிரிமியன் மக்களால் அங்கீகரிக்கப்பட்டன.

**1994 இல் யூரி மெஷ்கோவ் (Yuri Meshkov) ஜனவரி மாதம் கிரிமியாவின் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் 1994 இல் கிரிமியாவின் சுதந்திரதிற்கான வாக்கெடுப்பு யோசனை மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டது.**

17 மார்ச் 1995 அன்று, உக்ரைனின் பாராளுமன்றம் 1992 இன் கிரிமியன் அரசியலமைப்பை ஒழித்தது. அனைத்து சட்டங்கள் மற்றும் ஆணைகள் கீவ்வின் (உக்ரைன்) சட்டத்திற்கு முரணானது என்று கூறி கிரிமியாவின் ஜனாதிபதி பதவியை ஒழித்து நேரடி அரசியல் ஆட்சியை நிறுவியது. மேலும் கீவ் சார்பு பிரதமரை தேர்ந்தெடுத்தது.

அது கிரிமியாவிற்கு குறிப்பிடத்தக்க பொருளாதார சலுகைகளை வழங்கியது. கிரிமியன் பிரிவினைவாத இயக்கம் சரிந்தது.

### ரஷ்யாவிற்கும் உக்ரைனுக்கும் இடையேயான தகராறு

குறிப்பாக கடற்படையை அடிப்படையாகக் கொண்ட கிரிமியா துறைமுக நகரமான செவஸ்டோபோல் சம்பந்தமாக தகராறு கடுமையானதாக இருந்தது. 1992 இன் ஆரம்பத்தில் உக்ரைன் சோவியத் ஒன்றியத்தின் முக்கியமான கடற்படை சொத்தாக இருந்த முழு கடற்படைக்கும் உரிமை கோரியது.

கப்பற்படை எப்பொழுதும் ரஷ்யாவுக்கு சொந்தமாக இருந்ததாகவும் தொடர்ந்தும் ரஷ்யாவினுடையதாகவே இருக்கும் என்றும் ரஷ்யா சந்தேகத்திற்கு இடமின்றி பதிலளித்தது.

இந்த விவகாரத்தில் ஜூன் 1992 வரை இவ்விரு நாடுகளுக்குமிடையே கருத்து மோதல்கள் "war of decrees" தொடர்ந்தது. அதன்பின்னர் க்ரா வ்சுக் (Kravchuk) மற்றும் ரஷ்ய ஜனாதிபதி போர்ஸ் யெல்ட்சின் (Boris Yeltsin) கடற்படை மூன்று வருட காலத்திற்கு கூட்டாக நிர் வகிக்கப்படும் என்று ஒப்புக்கொண்டனர்.

பின்னர் கடற்படையின் சொத்துக்களை சமமாகப் பிரிக்க ஒரு உடன்பாடு எட்டப்பட்டது. தொடர்ந்து நடந்த பேச்சு வார்த்தையின் பிறகு உக்ரைன் ரஷ்யாவிற்கு கடற்படையின் பெரும்பகுதியைக் கொடுக்க ஒப்புக்கொண்டது.

(தொடரும்)

---

# தாக்குதலுக்கான ஒத்திகை பொறுப்பற்ற நடவடிக்கை

## சீனா மீது அமெ.குற்றச்சாட்டு

(வோஷிங்டன்)


**தாய்வான் விடயத்தில் சீனா ஆத்திரமூட்டும் மற்றும் பொறுப்பற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது என அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.**

இந்த நடவடிக்கைகள் தற்போதைய நிலையை மாற்றுவதற்கான சீனாவின் முயற்சிகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு என்றும் வெள்ளை மாளிகை கூறியுள்ளது.

தாய்வான் எல்லையில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்கான தமது நீண்டகால இலக்குடன் அவர்கள் முரண்படுகிறார்கள் என்றும் அமெரிக்கா கூறியுள்ளது.

நான்காவது நாளாக நேற்றும் தம்மீது தாக்குதல் நடத்துவதற்கு சீனா வான் மற்றும் கடல்வழியாக ஒத்திகை பார்த்ததாக தாய்வான் அறிவித்துள்ளது.

அமெரிக்காவின் ஜனநாயகக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் நான்சி பெலோசி தலைமையிலான அமெரிக்கத் குழு தாய்வான் சென்றதைத் தொடர்ந்து பதற்றங்கள் அதிகரித்துள்ளன.



தாய்வான் தமது கட்டுப்பாட்டில் உள்ள நாடு என உரிமை கோரிவரும் சீனாவிற்கு அமெரிக்கா மற்றும் தாய்வானின் நட்பு சவாலாக அமைந்துள்ளது.

இந்தநிலையில் தாய்வான் கடற்பரப்பில் கடந்த சில நாட்களாக சீனக் கப்பல்கள் மற்றும் விமானங்கள் சென்றதாக தாய்வான் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இது உத்தியோக பூர்வமற்ற நடவடிக்கை என்பதனால் அவர்களை எச்சரிக்க, வான் பரப்பில் போர் விமானங்களை தாமும் அனுப்பியதாக தாய்வான் அறிவித்துள்ளது. (4)

---

# காசா மீது இஸ்ரேல் தாக்குதல் 25 பேர் பலி



(இஸ்ரேல்)

பாலஸ்தீன மற்றும் இஸ்ரேல் எல்லைப் பகுதியான காசாவில் இஸ்ரேல் கணமூடித்தனமான விமானத் தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாகவும் உயிரிழப்புக்கள் அதிகரித்து வருவதாகவும் சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இரண்டாவது நாளாகவும் தொடர் தாக்குதல்களை மேற்கொண்டு வரும் இஸ்ரேலின் போர் விமானங்கள் மக்களின் குடியிருப்புக்களை இலக்கு வைத்து தாக்கிவருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த தாக்குதல்களில் இதுவரை 25 பேர் உயிரிழந்துள்ளதாகவும் சுமார் 130 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. உயிரிழந்தவர்களில் சிறுவர்கள் மற்றும் பெண்களும் அடங்குகின்றனர். (4)

---

# அமெரிக்காவில் துப்பாக்கிச் சூடு 4 பேர் பலி



(ஓகியோ)

அமெரிக்காவின் ஓகியோவில் உள்ள பட்லர் சவுன்ஷிப் பகுதியில் காரில் வந்த நபர் ஒருவர் திடீரென்று துப்பாக்கியால் பொது மக்கள் மீது சரமாரியாக சுட்டார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த மக்கள் அலறியடித்து ஓடினர். பின்னர் அந்த நபர் தப்பிச் சென்றார். இந்த துப்பாக்கிச் சூட்டில் 4 பேர் பரிதாப மாக உயிரிழந்தனர்.

துப்பாக்கிச் சூடு குறித்து தகவல் அறிந்ததும் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று பலியானவர்களின் உடலை கைப்பற்றினர். தப்பிஓடிய நபரை பொலிஸார் தீவிரமாக தேடி வருகிறார்கள். சம்பவம் நடந்த பகுதிகளில் கண்காணிப்பு கேமராக்களை ஆய்வு செய்த போது துப்பாக்கிச் சூடு நடத்திய நபர் வெள்ளை நிற காரில் தப்பி சென்றது தெரிய வந்தது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச ஒத்துழைப்புக்களை பெற அரசியல் ஸ்திரத்தன்மையை நிரூபியுங்கள்

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

**சர்வதேச நிறுவனங்கள், அமைப்புக்களிடமிருந்து ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கு இலங்கையில் அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை நிருபிக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.**

அதன்படி சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஜைக்கா உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்களின் மத்தியில், நாட்டின் ஸ்திரத்தன்மை உறுதியாக உள்ளது என்பதை அரசாங்கம் காண்பிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

சுதந்திர கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் பேசிய மைத்திரிபால சிறிசேன, வெகு விரைவில் சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என்றும் அதன் மூலமே ஸ்திரத்தன்மை உறுதி செய்யப்படும் என்றும் சுட்டிக் காட்டினார்.

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கான பொறுப்பு அரசாங்கத்திடமே காணப்படும் நிலையில் பாராளுமன்றத்தில் சில கட்சிகள் அதனை விரும்பவில்லை என்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.

அரசாங்கம் முயற்சிக்குமாயின் ஒரு மாத காலத்திற்குள் சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க முடியும் என்றும் அது நடந்தால் அமைச்சுப் பதவிகளை



ஏற்பதா இல்லையா என்று பின்னர் தீர்மானிக்கப்படும் என்றும் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். (4)

# அடக்குமுறைக்கு எதிராக அமெரிக்காவிலும் போராட்டம்

(கொழும்பு)

இலங்கையில் அரசாங்கத்தின் ஒடுக்குமுறை நடவடிக்கைகளிற்கு எதிர்ப்புத் தெரிவித்து அமெரிக்காவின் லொஸ்ஏஞ்சல்சில் இலங்கையர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பல மாத போராட்டங்களின் பின்னர் மக்களிற்கு கிடைத்த மக்கள் பெற்றுக் கொண்ட வெற்றி அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டுள்ளது என அமெரிக்காவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர்:

நாடு இந்த நிலைமைக்கு வருவதற்கு காரணமானவர்கள் அனைவரையும் நீதியின் முன் நிறுத்த வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (4)

# அரச மருத்துவமனைகளில் குவிந்து கிடக்கும் சடலங்கள்

(கொழும்பு)

அரச மருத்துவமனைகளில் குவிந்து கிடக்கும் அடையாளம் தெரியாத சடலங்களால் பல் வேறு சிக்கல்களை எதிர் கொள்ளவதாக சுகாதார தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

எனவே இந்த சடலங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய சட்ட நடவடிக்கைகள் குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க சுகாதார அமைச்சுக்கும் பொலிஸாருக்கும் பணிப்புரை விடுப்பதாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சுகாதார பணிப்பாளர் தலைமையிலான சுகாதார தரப்பினருக்கும் நீதி அமைச்சருக்கும் இடையிலான விசேட கலந்து ரையாடல் ஒன்று இடம்பெற்ற நிலையில் இந்த விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டன. (4)

# டொலர்களை சேகரிக்கவே வடக்கிற்கு சென்றேன்

## ரவி கருணாநாயக்க

(கொழும்பு)

நாட்டுக்கு டொலர்களை சேகரிக்கும் முயற்சியாகவே தான் ஹெலிகொப்டரில் வடக்கிற்கு சென்றதாக முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

வடக்கு கொழும்பு பிரதேசத்தில் குறைந்த வருமானம் பெறும் 4000 பேருக்கு சதொச காசோலை வழங்கும் கூட்டத்தில் ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே கருணாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஹெலிகொப்டரில் ஏன் வடக்கே சென்றீர்கள் என்று ஊடகவியலாளர்கள் கேள்விக்கு பதிலளித்த ரவி கருணாநாயக்க, நான் ஏன் போக முடியாது? நான்



அரசாங்கத்தில் இல்லை. அதனால் நான் ஏதாவது செய்ய விரும்புகிறேன்.

முதலீட்டாளர்களுடன் சென்று டொலர்களை சேகரிக்க முயற்சிக்கிறேன், இதை ஊடகங்களும் தெரிந்து கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார். (4)

# துப்பாக்கிச் சூடுகளைத் தடுக்க படையினருக்கு விசேட அதிகாரம்

(கொழும்பு)

துப்பாக்கிச் சூடு மற்றும் குற்றச் செயல்களை தடுப்பதற்கான அதிகாரங்கள் பாதுகாப்புப் படையினருக்கு வழங்கப்பட்டுள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொஸ்கம, பொரலுகொட ஸ்ரீ வர்தனாராமயவிற்கு விஜயம் செய்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "நாட்டில் அமைதியான சூழலை ஏற்படுத்த அரசாங்கம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றது.

குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் சில குழுக்களுக்கு விநியோகிக்கப்பட்ட துப்பாக்கிகள் எங்கள் வசம் உள்ளதை மக்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கடந்த அரசாங்கத்தினால் இவ்வாறான ஆயுதங்களை கைப்பற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோதிலும், அதற்கான செயற்பாடுகளை நிறைவு செய்ய முடியவில்லை.

மேலும், தனிப்பட்ட தகராறுகளை சமாளிப்பதற்காக சில நபர்கள் இவ்வாறான ஆயுதங்களை பயன்படுத்துகின்றனர்.



இந்நிலையில் தற்போதைய நிர்வாகம் நாட்டை மீண்டும் கட்டியெழுப்பக்கூடிய அமைதியான சூழலை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றது" எனத் தெரிவித்தார். (4)

# மண்சரிவு எச்சரிக்கை நீடிப்பு

(கொழும்பு)

தொடரும் சீரற்ற வானிலை காரணமாக 10 மாவட்டங்களைச் சேர்ந்த 65 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

இதேவேளை அனர்த்தங்கள் நிகழுமாயின் 117 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக அறிவிக்குமாறும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதேவேளை, ஏழு மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது. (4)

# தியாகம் செய்வதற்கு தயாராக இருங்கள்-மஹிந்த

(கொழும்பு)

சர்வகட்சி அரசாங்கத்தில் இணையும் அனைத்து தரப்பினரும் தாராள மனப்பான்மையுடன் தியாகம் செய்பவர்களாக செயற்பட வேண்டும் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



மாத்திரமே அந்த அரசாங்கத்தை சிறப்பாக முன்னெடுத்துச் செல்ல முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உத்தேச சர்வகட்சி அரசாங்கத்தில் பல இடதுசாரி-வலதுசாரி மற்றும் மிதவாதி கட்சிகளும் உள்ளடங்குகின்றன.

இவ்வாறான கலப்பு அரசியல் திட்டத்தில் ஒவ்வொரு தரப்பினரும் தமது பெருமைகளை மறந்து நாட்டை தற்போதைய நெருக்கடியிலிருந்து காப்பாற்ற தியாகம் செய்ய வேண்டும்.

இல்லையேல் இந்த சர்வகட்சி அரசாங்கம் மற்றுமொரு பேச்சுக் கூடமாகவே இருக்கும் எனவும் மஹிந்த தெரிவித்தார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயம் இன்னதென்று அறிந்தும் அதை நீ செய்யாதிருப்பது கோழைத்தனமாகும்.
- கோன்பு தஸன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## விலைக் குறைப்பில் கவனம் செலுத்துங்கள்

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக அத்தியாவசியப் பொருட்கள் உட்பட அனைத்துப் பொருட்களின் விலைகளும் கண்டபாட்டில் உயர்வடைந்தன.

தவிர, பெரும்பாலான பொருட்களின் விலைகளை வர்த்தகர்கள் தாமே நிர்ணயித்தனர்.

இதன்விளைவாக குறித்த ஒரு பொருளுக்கு ஒவ்வொரு வர்த்தக நிலையங்களிலும் வெவ்வேறான விலைகள் காணப்பட்டன.

இதைவிட, நேற்று ஆயிரம் ரூபாயுக்கு விற்பனையான பொருளை இன்று இரண்டாயிரம் ரூபாயுக்கு விற்பனை செய்கின்ற அறம் இழந்த செயல்களும் நடந்தன, நடக்கின்றன.

அதேநேரம் கொள்வனவு செய்த விலையோடு ஒரு சிறு இலாபத்தை வைத்து விற்பனை செய்த நேர்மைகுன்றாத வர்த்தகர்களும் நம் மத்தியில் உளர் என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

எதுஎவ்வாறாயினும் அறத்தால் வருகின்ற உழைப்பே நிலைக்கும் என்ற மெய்ப்பொருளை நம் வர்த்தகர்கள் ஒருபோதும் மறந்துவிடலாகாது.

தற்போது, அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைவடைந்துள்ளமை இங்கு நோக்குதற்குரியது.

கொழும்பு புறக்கோட்டை வர்த்தக சங்கத்தின் அறிவித்தல்களின் பிரகாரம் சீனி, பருப்பு, வெங்காயம், மிளகாய் ஆகிய பொருட்களின் விலைகள் கணிசமாகக் குறைவடைந்துள்ளன.

உதாரணத்துக்கு 330 ரூபாயாக விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ சீனியின் விலை 270 ரூபாயாக குறைவடைந்துள்ளது.

அதாவது ஒரு கிலோ சீனியின் விலை அறுபது ரூபாயால் வீழ்ச்சி கண்டுள்ளமை மிகப்பெரிய மாற்றம் எனலாம். இருந்தும் நம் வர்த்தகர்கள் இது தொடர்பில் கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை.

விலை உயருகின்றபோது சடுதியாக விலை அதிகரிப்பைச் செய்கின்ற வர்த்தகர்கள், விலை குறையும்போது அதனை ஆற அமர விட்டுவிடுவது ஏன்? என்பதுதான் புரியாமல் உள்ளது.

இங்கு விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்கின்ற அளவில் நிலைமை இல்லை.

இதை நாம் கூறும்போது, இது என்ன? என்று நீங்கள் வியக்கலாம்.

இங்குதான் உண்மை நிலை பற்றி நாம் சிந்தித்தாக வேண்டும். அதாவது வடபுலத்தைப் பொறுத்தவரை விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் பெரும் வர்த்தகர்கள் தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. சுருங்கக்கூறின் பெரும் வர்த்தகர்கள் மீது நடவடிக்கை எடுக்க முற்படும்போது, அது தமக்கு ஆபத்தாகிவிடுமோ என்ற அச்சம் விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளிடம் உண்டு.

அதேநேரம் தங்கள் தொழிலைப் பாதுகாப்பதற்காக எங்காவது வறுமைப்பட்டிருக்கக் கூடிய ஏழை வர்த்தகர்களின் கடையைச் சோதித்துவிட்டு விலை கூட்டி விற்பதாக வழக்குப் பதிவு செய்கின்ற அளவிலேயே நம் விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் இருக்கின்றனர்.

ஆகையால் விலைக்குறைப்பில் விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரி; நேரத்தை வீணாக்கவோ அன்றி ஏழை வர்த்தகர்களின் வயிற்றில் அடிக்கவோ நாம் விரும்பவில்லை.

மாறாக எங்கள் வர்த்தகப் பெருமக்கள் தாமாக முன்வந்து விலைக்குறைப்பைச் செய்து மக்களின் நுகர்வுக்கு உதவ வேண்டும் என்பதுதான் நம் தாழ்மையான கோரிக்கை.

## சர்வகட்சி அரசில் இணையப்போவதாக வெளியான செய்தியில் உண்மையில்லை

### விமல் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வகட்சி அரசாங்கத்தில் இணைந்து கொள்வதாக தாம் கூறியதாக வெளியான செய்திகள் உண்மை அல்ல என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

தேசிய ஒருமைப்பாட்டு சக்தி கூட்டணியின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த கருத்தை மேற்கோள் காட்டி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தற்போதைய பொருளாதார நெருக்கடி அரசியல் நெருக்கடியாக உருவாகியுள்ள இவ்வேளையில் இந்த இடைக் காலத்தை நிறைவேற்றுவதற்கு சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதே சரியான தீர்வாக அமையும் என்பதை முதலில் நாட்டுக்கு சுட்டிக்காட்டியது அவரது குழுவினரே.

அவர்கள் தமது கோரிக்கைகளை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் எழுத்து மூலம் சமர்ப்பித்த போதும் அது உரிய முறையில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

அத்துடன், குறைந்தபட்ச பொது தேசிய வேலைத்திட்டம் ஒன்றை தயாரிப்பதற்காக கடந்த மாதம் 28 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் 12 முன்மொழிவுகள் அடங்கிய பிரேரணையை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அனைத்துக் கட்சிகளின் இணக்கப்பாட்டுடன் குறைந்தபட்ச பொது தேசிய வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு சர்வகட்சி அரசாங்கம் தேவை எனவும், தமது ஆலோசனைகளை கருத்திற்கொண்டு எதிர்கால பொது தேசிய வேலைத்திட்டம் தொடர்பில் அவதானம் செலுத்தி வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க, சர்வகட்சி அரசாங்கத்தில் இணைந்து கொண்டால், அது தொடர்பில் பகிரங்கமாக பொதுமக்களுக்கு அறிவிப்பேன் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## கோவிட் தொற்று மேலும் மூவர் மரணம்

இலங்கையில் மேலும் 3 பேர் கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த மரணங்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நாட்டில் பதிவான மொத்த கோவிட் இறப்புக்களின் எண்ணிக்கை 16,586 ஆக அதிகரித்துள்ளது. (ம-7)

## பொலிஸ் நிலையத்தில் ஒருவர் கத்தியால் குத்தி படுகொலை

(கொழும்பு)

மேல் மாகாணத்தின் நவகமுவ பொலிஸ் நிலையத்தினுள் ஒருவர் கத்தியால் குத்தி படுகொலை செய்யப்பட்டுள்ளார். இச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

பொலிஸ் நிலையத்தினுள் மற்றும் ஒருவரால் கத்தியால் குத்தப்பட்ட நிலையில் 52 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.(ம-7)

## அரச வங்கி ஒன்றில் ரூ. 6 கோடிக்கு மேல் மோசடி

### பெண் ஒருவர் கைது

(கொழும்பு)

அரச வங்கியில் 6 கோடியே 83 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாவை மோசடி செய்வதற்காக ஒத்துழைப்பு வழங்கிய பெண்ணொருவரை குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் கைது செய்துள்ளனர்.

கடவத்தை அரச வங்கியொன்றில் போலி ஆவணங்களை வெவ்வேறு நபர்களை போன்று சமர்ப்பித்து 48 தனிநபர் கடன்கள் பெறப்பட்டு மோசடி செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்கு ஒத்துழைப்பு வழங்கிய வங்கி ஊழியரான மற்றுமொரு பெண் உயிரிழந்துள்ளார்.

மோசடிக்கு ஒத்துழைப்பு வழங்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பெண் குறித்த வங்கியின் வங்கி கடன் பிரிவில் சேவை புரிந்து ஓய்வு பெற்ற உதவிப் பொது முகாமையாளர் என்பது தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட பெண் 62 வயதுடையவர் என்பதுடன் கடவத்தையை சேர்ந்த அவர் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ம-7)

## சர்வகட்சி அரசாங்கத்தில் பதவிகள் ஏற்கமாட்டேன்

### முன்னாள் ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

எந்தவொரு பதவியையும் ஏற்காமல் அரசாங்கத்தின் எதிர்கால வேலைத்திட்டத்திற்கு ஆதரவளிப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி தற்போதைய ஜனாதிபதியின் தலைமையிலான புதிய அரசாங்கம் நாட்டின் பொருளாதார நெருக்கடியை போக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதை காணக்கூடியதாகவும் அதற்கு தான் முழு ஆதரவும் வழங்குவதாகவும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், தாம் எந்தவொரு பதவியையும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை எனவும் தற்போதைய அரசாங்கத்துடன் இணைந்து மக்களின் முன்னேற்றத்திற்காக செயற்படுவேன் எனவும் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ம-7)

## மின் கட்டண திருத்தம் நாளை அறிவிக்கப்படும்

(கொழும்பு)

மின் கட்டண திருத்தம் தொடர்பான அறிவிப்பு நாளை செவ்வாய்க்கிழமை வெளியிடப்படவுள்ளது.

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் அன்றைய தினம் மின் கட்டண திருத்தம் தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இன்றைய தினம் நிதி அமைச்சு, வலுசக்தி அமைச்சு மற்றும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ஆகியனவற்றுக்கிடையில் சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது.

புதிய கட்டண திருத்தம் மற்றும் குறைந்த வருமானம் கொண்டவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்படவுள்ளன.

புதிய கட்டண திருத்தம் தொடர்பான யோசனைகளை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு பொதுமக்களிடம் முன்னதாக கோரியிருந்தது.

இதற்கமைய கிடைக்கப்பெற்ற யோசனைகள் மற்றும் பரிந்துரைகளை ஆராய்ந்து புதிய மின் கட்டண திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்லை உலர விடுவதற்கு போதியளவு தளங்கள் இல்லை

## வன்னேரிக்குளம் விவசாயிகள் கவலை

(கண்டாவளை)

கிளிநொச்சி வன்னேரிக்குளம் விவசாயிகள் தற்போது சிறுபோகத்தில் அறுவடை செய்யும் நெல்லை உலர வைப்பதற்கான போதிய நெல் உலரவிடும் தளங்கள் இன்றியும் அறுவடை செய்யும் நெல்லை சந்தைப்படுத்த முடியாமலும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய கிராமங்களில் ஒன்றாக காணப்படுகின்ற வன்னேரிக்குளத்தின் கீழுள்ள விவசாயிகள் சிறுபோக அறுவடையில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறு அறுவடைகள் இடம் பெற்று வரும் நிலையில் அறுவடைக்கு தேவையான எரிபொருள் இன்மை, அறுவடை செய்யும் நெல்லைச் சந்தைப் படுத்த முடியாமை, நெல்லை உலர விடுவதற்கான தள வசதிகள் இன்மை என்று பல்வேறு இடர்பாடுகளுக்கு முகம் கொடுத்து வருவதாக தெரிவித்துள்ளனர்.

தற்போது மழையுடனான காலநிலை நிலவி வருவதனால் மேலும் பாதிப்புக்களை எதிர்கொள்வதுடன் நெல்லை அறுவடை செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருதாகவும் தெரிவித்துள்ளனர்.

குறித்த அறுவடை செய்யும் நெல்லை சந்தைப்படுத்தக் கூடிய வசதி வாய்ப்புகள் இதுவரை இல்லை. தனியாரோ அல்லது நெல் சந்தைப்படுத்தும் சபையோ தங்களுடைய கிராமங்களுக்கு வருகை தரவில்லை என்றும் இதனால் நெல்லை சந்தைப் படுத்த முடியாத நிலையில் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருவதாகவும் தெரிவித்துள்ளனர் (4-315)

# அதிகார பரவலாக்கம் சிறுபான்மை சமூகத்தினருக்கும் உரித்துடையது

## சட்டத்தரணி அம்பிகா சிறிதரன்

(சாவகச்சேரி)

இலங்கையில் அதிகாரப் பரவலாக்கம் சிறுபான்மையின சமூகத்திற்கும் உரித்துடையது என வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு நிறுவனத்தின் அங்கத்துவ அமைப்பு பிரதிநிதியான சட்டத்தரணி அம்பிகா சிறிதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை அரசியல் தீர்வினை வலியுறுத்தி நாவற்குழியில் இடம்பெற்ற கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையில் சிறுபான்மையின சமூகங்கள் மீது கடந்த 50வருடங்களுக்கு மேலாக அடக்குமுறைகள், வன்முறைகள் இடம்பெற்று வருகிறது.

50வருடங்களாக சிறுபான்மையினரின் உரிமைகள் மறுக்கப்பட்டு அவர்களின் குரல்கள் கேட்கப்படாத நிலையே காணப்படுகிறது.

சிறுபான்மையின சமூகங்கள் பல காலமாக தமது உரிமைகளுக்காகப் போராடி வருகின்றனர். வடக்கு-கிழக்கு மாகாண சிறுபான்மையின மக்களுக்கு அரசியல் தீர்வொன்று வழங்கப்பட வேண்டும். அவர்களுடைய குரல்கள் செவிசாய்க்கப்பட்டு நிரத்தரத் தீர்வொன்று வழங்கப்பட வேண்டும்.

சிறுபான்மையின சமூகங்களாகிய எமக்கு எமது ஆளுகைக்கு உட்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தீர்மானங்களை எடுக்கும் அதிகாரத்தை எம்மிடமே வழங்க வேண்டும் எனத் தெரிவித்தார். (4-30)

# புளொட் அமைப்பின் 10 ஆவது தேசிய மாநாடு



(யாழ்ப்பாணம்)

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் பத்தாவது தேசிய மாநாடு நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் உள்ள ராஜா தனியார் மண்டபத்தின் சதானந்தம் அரங்கில் இடம்பெற்றது.

இதன்போது மங்கள விளக்கேற்றப்பட்டதுடன் புளொட்டின் செயலதிபர் உமாமகேஸ்வரனின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு நிகழ்வு ஆரம்பமாகி நடைபெற்றது.

மாநாட்டில் பிறகட்சித் தலைவர்களும் கலந்து கொண்டதுடன் புளொட் அமைப்பின் ஆரம்ப கால உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (4-33)

# இரத்ததான முகாம்

(குப்பிழான்)

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்தவங்கியில் தற்போது நிலவும் இரத்தத் தட்டுப்பாட்டினைக் கருத்திற் கொண்டு யாழ்.திருநெல்வேலியைத் தளமாக கொண்டு இயங்கும் அக்னி இளைஞர் அணியினரின் ஏற்பாட்டில் North way Family Mart இன் அனுசரணையுடன் முன்னெடுக்கப் படும் இரத்ததான முகாம் நிகழ்வு எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை திருநெல்வேலி சிவன் வீதியில் அமைந்துள்ள ஜே/110 கிராம அலுவலக முன் மண்டபத்தில் இடம்பெற உள்ளது.

மேற்படி இரத்ததான முகாம் நிகழ்வில் குருதிக் கொடையாளர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொண்டு இரத்ததானப் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (4-18)

# நல்லூர் முருகன் உற்சவகால தெய்வீக இசை அரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவத்தினை முன்னிட்டு இலங்கை இளங்கலைஞர் மன்றத்தினால் நடத்தப்படும் தெய்வீக இசையரங்கு நிகழ்வில் 7 ஆம் திருவிழாவான இன்று திங்கட் கிழமை மாலை 6.45 மணிக்கு நல்லூர் சாரங்கம் இசைக்கல்லூரியினரால் குழு இசை இடம்பெறவுள்ளது.

இதில் வயலின்-கே.வேலதீபன், மிருதங்கம்-ஞா.வசந், நெறியாள் கை-வாசஸ்பதி ராஜீந்திரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து 7.15 மணிக்கு காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தினரால் நிருத்தியாஞ்சலி நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதன்போது வயலின் - சு.நிறைஞ்சலா, மிருதங்கம்-ப.விக்னேஸ்வரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (4)

# ஜோசப் ஸ்டாலின் கைது சட்டபூர்வமானது - ரணில்

ஜோசப் ஸ்டாலினைக் கைது செய்திருப்பது சட்டபூர்வமானது என்றும் அது குறித்து அவரிடம் பேசியதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இருப்பினும் நிர்வாக அமைப்பில் மாற்றம் வேண்டும் என பேசும் போராட்டக்காரர்களை பாராட்டுவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

போராட்டத்தினால் நல்லவை மட்டுமல்ல தீமையும் நடந்ததாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, நல்லதை மட்டும் வைத்து விட்டு, கெட்டதைப் புறக்கணிப்போம் என்றும் கேட்டுக்கொண்டார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் பேசிய அவர், சட்ட அமுலாக்கத்தில் குறைபாடுகள் இருப்பின் கலந்துரையாடி தீர்வை காண்போம் என்றும் கூறினார். (4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 300 | 250 | 250 |
| உருளைக்கிழங்கு | 320 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 350 | 350 | 450 |
| தக்காளி | 250 | 350 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 300 | 180 |
| கோவா | 180 | 350 | 300 | 350 |
| கரட் | 250 | 350 | 350 | 400 |
| பூசணி | 120 | 150 | 140 | 140 |
| புடோல் | 140 | 120 | 120 | 180 |
| வாழைக்காய் | 150 | 120 | 120 | 100 |
| சின்ன வெங்காயம் | 250 | 360 | 350 | 350 |
| பெரிய வெங்காயம் | 300 | 200 | 180 | 200 |
| பாகற்காய் | 300 | 350 | 450 | 400 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 80 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 200 | 160 | 250 |
| பயற்றங்காய் | 200 | 200 | 200 | 350 |
| லீக்ஸ் | 240 | 300 | 250 | 300 |
| பீற்றூட் | 120 | 200 | 140 | 200 |
| கறிமிளகாய் | 600 | 500 | 400 | 80 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 450 | 500 |
| போஞ்சி | 400 | 450 | 500 | 500 |
| கத்தரிதம்புள்ள | 220 | 200 | --- | 240 |
| கீரை - 1 பிடி | 160 | 100 | 100 | 150 |
| தேசிக்காய் | 300 | 300 | 300 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 60-70 | 60-90 |
| இராசவள்ளி | 200 | 250 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 250 | 300 | 300 | 400 |
| முள்ளங்கி | 120 | 120 | 70 | 200 |
| பொன்னாங்கண்ணி | 40 | 90 | 100 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 30 |
| ஈரப்பலா | 100 | 80 | 100 | 120 |




கிளிநொச்சியில் மாபெரும் மரதன் ஓட்டப்போட்டி இடம் பெற்றது. குறித்த போட்டியானது வடக்கு மாகாணம் தழுவி வீரர்களை அடையாளம் காணும் வகையில் முன்னெடுக்கப்பட்டது. இரணைமடுவிலிருந்து, பரந்தன் வரையான குறித்த மரதன் போட்டியானது அபியகத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மக்கள் அமைப்பின் அனுசரணையுடன் இடம் பெற்றது. 300க்கும் மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் கலந்து கொண்ட குறித்த போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசுகள் வழங்கி வைக்கப்பட்டன.

(படம்: சப்தசங்கரி, தேவானந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகல கட்சிகளின்...

தேர்தல் முறைமை திருத்தம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ராஜகிரியவில் உள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவின் அலுவலகத்தில் இன்று முற்பகல் 10 மணியளவில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## ரணிலுக்கு சிறிது...

என்பன தற்போது சிறிது சிறிதாக மீண்டும் கண்ணுக்குத் தென்பட ஆரம்பித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், ஜனாதிபதி ஆறு மாதங்களுக்கு சிக்கல் இல்லாமல் நாட்டை முன்னெடுத்துச் செல்ல இடமளிக்க வேண்டும்.

இதனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆறு மாதங்கள் எந்த சிக்கலும் இல்லாமல் நாட்டை முன்னெடுத்துச் செல்ல இடமளிக்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

குறித்த இந்தச் சந்தர்ப்பத்தில் தொழிற்சங்கங்கள் பதாகைகளை ஏந்தினால் மீண்டும் டீசல், பெற்றோல் இல்லாமல் போகும். இதனால் இளம் தலைமுறையினரின் எதிர்காலமே அழிந்து போகும். தொழிற்சங்கங்களுக்கு உரிமைகள் இருக்கின்றன.

எனினும், தற்போது இருப்பது வீழ்ச்சியடைந்த வங்குரோத்து நாடு என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். ரணில் விக்கிரமசிங்கவுக்கு மாத்திரமல்லாது நாடும், அணியும் ஆடைகள் கூட இழந்த சந்தர்ப்பத்திலேயே அவர் ஜனாதிபதியாக பதவிக்கு வந்தார்.

மேலும் ரணிலுக்கு சிறிது வாய்ப்பை வழங்கினால் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் பிரச்சினை தீர்ந்து நாடு மீண்டும் சுபிட்சமான நிலைமைக்கு வரும் எனவும் வஜிர அபேவர்தன தெரிவித்தார். (ம-7)

## QR கோட்டா...

தொடர்பான கோட்டா முறை நள்ளிரவு புதுப்பிக்கப்படும் எனவும், ஒவ்வொரு வாகனத்திற்கும் இவ்வாரம் ஒதுக்கீடு செய்யப்பட்ட அளவு எதிர்வரும் வாரமும் அமுல்படுத்தப்படும் என அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

டுவிட்டர் பதிவொன்றில் அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த வாரம் தரவுகளை பகுப்பாய்வு செய்த பிறகு, அடுத்த ஞாயிற்றுக்கிழமை முடிந்தவரை தேவையான மாற்றங்கள் செய்யப்படும் என எரிசக்தி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

தேசிய எரிபொருள் விநியோக அட்டை QR முறை நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் கடந்த முதலாம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## ஜே.வி.பி.-...

காக நேரத்தை ஒதுக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார் என அறிய முடிகின்றது.

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி, சர்வகட்சி அரசு தொடர்பில் இரு தரப்பினரும் கலந்துரையாடவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (ம-7)

## நாட்டு மக்களுக்...

இத்தேபானே தம்மாலங்கார தேரருடன், ருக்மலே - தர்மவிஜயலோக்க விகாரையில் இடம்பெற்ற சந்திப்பின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமராக நான் பொறுப்பேற்றால் அதன் பொறுப்பை முடிக்க வேண்டும்.

பிரதமராக அரசியலமைப்பின்படி பணியாற்ற எமக்கு அதிகாரம் காணப்பட்டது.

அன்றையதினம் எனக்கு தனிப்பட்ட இழப்புகள் காணப்பட்டாலும் நாட்டின் பிரதமர் என்ற வகையில் அரசியலமைப்பைப் பாதுகாத்தேன்.

தனிப்பட்ட இழப்புகளை பின்னர் தீர்த்துக் கொள்ள முடியும். நாட்டிற்கு இழப்பு ஏற்பட்டால் அதனை தீர்த்துக் கொள்ள முடியாது.

நாம் அனைவரும் அரசியலமைப்பிற்கு ஏற்ப செயற்பட வேண்டும்.

மக்களின் உரிமைகளைப் பாராளுமன்றம், நீதிமன்றம் மற்றும் ஜனாதிபதியின் ஊடாகவே தீர்க்க முடியும்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதிகாரத்தைக் கையில் எடுத்து செயற்பட முடியாது.

பிரச்சினைகளை வன்முறைகளால் தீர்க்க முடியாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (ம-7)

## சர்வதேச நாணய...

னணி, தமிழ்க் கூட்டமைப்பு என்பன இணையாது என்று தனக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

இதேவேளை ஆர்ப்பாட்டத்தில் ஈடு [illegible]

பட்ட மக்களின் உண்மையான அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கு அதன் மோசமான பக்கங்களைக் களைந்து நல்ல இலக்குகளுடன் மீண்டும் ஒன்றிணைய வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (ம-7)

## ரணில் - சீனத்...

துறைமுகத்தில் இருந்து அண்ணளவாக 1100 கடல் மைல் தொலைவில் தனது பயணத்தை முன்னெடுத்துள்ள நிலையில் இச்சந்திப்பு அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. (ம-7)

## பாரிய மக்கள்...

பிறப்பிக்க உள்ளதாக தொழிற்சங்க கூட்டமைப்பின் பிரதிநிதியும் ஜே.வி.பியின் மத்திய குழு உறுப்பினருமான வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் அவர் இந்த அறைகூவலை விடுத்துள்ளார்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

ரணில் ராஜபக்ஷ கலப்பு அரசாங்கத்தை அமைத்தாலும் அது நாட்டு மக்களின் எதிர்பார்ப்பு அல்ல.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி நாற்காலியில் அமர்வதற்கு முன்னர் போராட்டம் தொடர்பில் பல்வேறு விமர்சனங்களையும் முன்வைத்திருந்தார். நாற்காலியில் அமர்ந்த பின்னர் போராட்டம் சட்ட விரோதமானது, பாசிசவாதம் கண்டது எனக் கூறுவது தவறானது.

ரணில் விக்கிரமசிங்கவை வைத்து ராஜபக்ஷர்கள் காய் நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள். மக்களின் கனவு இதுவல்ல. தத்தமது நகரங்களில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதனை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவரது அரசாங்கத்திற்கு நாம் பகிரங்கமாகவே கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

ஆகையினால், நாட்டில் உள்ள அனைத்து மக்களும் தத்தமது நகரங்களில் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் எனவும் அனைவரும் தமது தொழில் இடங்களில் இருந்து வந்து போராட வேண்டும் எனவும் கூறியுள்ளார். (ம-7)

## ஜனாதிபதி ரணில்...

எம்.ஏ. சுமந்திரன் குற்றஞ் சுமத்தியுள்ளார்.

ஜனாதிபதி தெரிவுக்கான இரகசிய வாக்கெடுப்பின்போது கூட்டமைப்பு எம்.பிக்கள் பலர் தனக்கு வாக்களித்ததாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கூட்டமைப்புடனான சந்திப்பில் அண்மையில் கூறியிருந்தார்.

தற்போது இதனைச் சுமந்திரன் மறுத்துள்ளதோடு, ஜனாதிபதி பொய் கூறியதாகவும் டுவிட் செய்துள்ளார்.

"ஜனாதிபதி பொய் பேசுகிறார். த. தே. கூ., டலஸ் அழகபெருமவுக்கு வாக்களிப்பதாக எடுத்த தீர்மானம் ஏகமனதானது மட்டுமல்ல, ரணிலுக்கு வாக்களிக்க வேண்டும் என்ற கருத்தை கூட்டத்தில் எந்தக் கட்டத்திலும் ஒருவர் கூட கூறியிருக்கவில்லை." எனவும் சுமந்திரன் டுவிட் செய்துள்ளார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127

கொவிசெத
திகதி 2022.08.07 சீட்டிழுப்பு இலக்கம் 3082
ஆங்கில எழுத்து L வெற்றி இலக்கங்கள் 11 53 60 80
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 07/08/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1188
S 15 01 28 31 39

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.08.07
சீட்டிழுப்பு இலக்கம் 149
துலாம் 05 06 13 26 துலாம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2022/08/07
சீட்டிழுப்பு இலக்கம் 4840
V 4 0 5 1 3 1
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி -2022.08.07
சீட்டிழுப்பு இலக்கம் -870
Q 27 35 37 69
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1815 நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2022.08.07 தினம் ஞாயிற்றுக்கிழமை
I 11 22 52 73
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 1,732,900/-

சனிதா
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.08.07
சீட்டிழுப்பு இல : 3976
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,364,060/-
வெற்றி இலக்கங்கள் 23 42 65 73 I

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 206
சீட்டிழுப்பு திகதி 2022.08.07 ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 01 15 48
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,372,620/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,521,336.20
திகதி 2022-08-07
வெற்றி வாரம் 3527
வர்ணம் ஊதா
வெற்றி இலக்கங்கள் 12 30 40 47
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,895,880/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
S 28 20 35 70 71
சீட்டிழுப்பு வாரம் 991
வர்ணம் மஞ்சள்
2022.08.07 ஞாயிற்றுக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 252,187,339/-
தொலை பேசி 011-2 333 546-47
Web : www.dlb.lk

அதி கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1641
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி : 2022.08.07
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,406,240/-
வெற்றி இலக்கங்கள் 18 47 48 76 H

## நாட்டைக் கட்டியெழுப்பத் தயார்

# ஜனநாயகத்தை மறந்திருந்தால் நானே இன்று ஜனாதிபதி

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

**ஜனநாயகம் தார்மீகத்தை மறந்து நாகரீகமற்ற முறையில் முடிவுகளை எடுத்திருந்தால் இன்று நான் ஜனாதிபதியாகியிருக்க முடியும் எனவும் ஆனால் நெறிமுறையற்ற ஜனாதிபதியாக ஆகாமல் மக்களின் விருப்பின்றி எந்தவொரு பதவிகளையும் எடுப்பதில்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் நிலவும் இக்கட்டான சூழலை புரிந்து கொண்டு அனைவரும் நாட்டைக் கட்டியெழுப்ப ஒன்றிணைய வேண்டும் எனவும் இதில் அமைச்சுப் பதவிகளை வகிக்காமல் பாராளுமன்றக் குழு முறையின் ஊடாக கைகோர்த்து நாட்டைக் கட்டியெழுப்பத் தயார் எனவும் தெரிவித்தார்.

இன்று மக்கள் மிகுந்த துக்கத்திலும் வேதனையில் உள்ளனர் எனவும், 2019 ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் எத்தகைய வரிசைகளும் இருக்கவில்லை எனவும், குறைந்த பணவீக்கத்துடன் சுயமரியாதையுடன் வாழ்ந்ததாகவும் எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி தலைமையிலான ராஜபக்ஷ பரம்பரையின் மொட்டுக் குடும்ப ஆட்சியின், கவனக்குறைவான நிர்வாகத்தால், தற்போது உலகம் முழுவதும் சென்று டொலர் தேடி பிச்சையெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.


அவ்வாறே தற்போதைய அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தை பிறப்பித்து மக்களின் ஜனநாயக உரிமைகளை இல்லாதொழித்து தொழிற்சங்க தலைவர்களைக் கூட வேட்டையாடுகின்றனர் எனவும், ரணில் விக்கிரமசிங்க கூட ஒருமுறை பாராளுமன்றத்தில் ஜோசப் ஸ்டாலினின் கைதும் GSP+ இழப்பிற்கு ஒரு காரணமாக இருக்கலாம் என்று கூறினாலும், அவர் ஜனாதிபதியாக பதவியேற்ற உடனேயே ஜோசப் ஸ்டாலின் கைது செய்யப்பட்டார் எனவும் இது முறையற்ற செயல் எனவும் தெரிவித்தார்.

(ம-7)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
**ஆகாஸ் நகை மாடம்**
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும்.
(12379)
076 825 7716 (ஆகாஸ்)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
**றாஜ் நகை மாடம்**
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623
(12344)

## நடிகர் நாசர் திருமலை விஜயம்



தென்னிந்திய திரைப்பட நடிகர் நாசர் திருகோணமலைக்கு விஜயம் செய்துள்ளார்.

திருகோணமலை மூதூர் சேனையூரில் பேராசிரியர் பாலசுகுமாரனின் மகள் அனாமிகா நினைவாக அமைக்கபட்ட "அனாமிகா களரி பண்பாட்டு அமையத்தின்" திறப்பு விழா 6 ஆம் திகதி இடம் பெற்றது.

இந்நிகழ்வுக்கு தென்னிந்திய திரைப்பட நடிகர் நாசர் அதிதியாக கலந்து கொண்டார்.

(ம-7)

EDUS
Learning made lovable
**VACANCY**
**ACADEMIC COORDINATOR**
*Qulifications:* Salary : Interview
- Communication Skills
- MS Office
- English Fluency
*School leavers preferred*
கொக்குவிலுக்கு அருகில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
(12381)
EDUS - 077 086 9328

**இறைச்சிக் கோழி விற்பனை**
புறொய்லர் கோழி இறைச்சி மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
சுத்தம் செய்யப்பட்டது 1Kg - 1350/=
கூடுதல் கொள்வனவுகளுக்கு
விசேட விலைக் கழிவு வழங்கப்படும்.
(12382)
**U.S.A பாம்**
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
தொ. இல. 077 868 9500

**10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**
அமரர் திருமதி
**சரஸ்வதி ஜெயம்**
பிறப்பு 16.01.1954
இறப்பு 29.07.2012
(12380)



வரம் போல எம் வாழ்வில் என்றும் நிறைந்தவளே
நெடுந்தூரம் எமை விட்டு சென்றதும் ஏனோ?
தூரங்குன்றா உன் அன்பை போல் - தாயே
தரணியில் மற்றொன்று காண்போமோ.
சிவன் வீதி,
ஆவரங்கால்.
குடும்பத்தினர்

**VISA விண்ணப்பங்கள்**
அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா
Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்
(C-4659)
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777

**உடனடி வேலை வாய்ப்புக்கள்**
EXECUTIVE OFFICER
✓ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/=
(நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
✓ வயது-22 தொடக்கம் 35
✓ தகுதி- பட்டதாரிகள்
(ஆங்கில அறிவு அவசியமானது)
(C-4659)
V2 TRAVELS
AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER
போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்
49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம்
0777-068-777

**காணி விற்பனைக்கு**
யாழ். நாவற்குழி சந்தியில் 48 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
- A9 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்.
- நாவற்குழி சந்தியில் இருந்து 500m தூரத்தில்.
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- A9 வீதியில் இருந்து 200m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை மூன்று இலட்சம் (300,000/=) மட்டும்.
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.
- யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 4Km தூரம்.
பார்வையிடும் நேரம் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை
076 490 5403, 076 491 2493, 076 490 6029
(_2378)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.08.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.